# தகவல்களை முன்கூட்டியே வெளிப்படுத்தும்

## இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ்: அரச நிறுவனங்களின் தரவரிசை

செப்டம்பர் 2023



**நிர்வாகச் சுருக்கம்**

# தகவல்களை முன்கூட்டியே வெளிப்படுத்தும்

## இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ்: அரச நிறுவனங்களின் தரவரிசை

---

### நிர்வாகச் சுருக்கம்

செப்டம்பர் 2023

Copyright © 2023 Verité Research Pvt Ltd. All rights reserved.

# நிர்வாகச் சுருக்கம்

2017 இல், உலக வங்கியின் ஆதரவுடன் இந்த மதிப்பீட்டிற்கான ஆய்வு முறைமையை வெரிட்டே ரிசர்ச் வகுத்தது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 55 அரச நிறுவனங்களின் நிகழ்நிலையினூடாக (ஆன்லைனூடாக) முன்கூட்டிய தகவல் வெளிப்படுத்தல் (proactive disclosure) தேவைகளுக்கு இணங்குவதை மதிப்பீடு செய்தது. பின்னர், 2022 ஜூலை நிலவரப்படி, 2022 டிசம்பர் 01 முதல் 2022 டிசம்பர் 31 வரையிலான காலகட்டத்தில், 29 அமைச்சரவை அமைச்சுகளையும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் அலுவலகங்களையும் மதிப்பிடுவதற்கு இதே ஆய்வு முறைமை பயன்படுத்தப்பட்டது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 ஆம் மற்றும் 9 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள, முன்கூட்டிய தகவல் வெளிப்படுத்துவதற்கான சட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறை இல. 20 இன் அடிப்படையில் மதிப்பீட்டிற்கான ஆய்வு முறைமை உருவாக்கப்பட்டுள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 9 ஆம் பிரிவுகள் அமைச்சுகளுக்கு மட்டுமே பொருந்தும் (ஜனாதிபதி மற்றும் பிரதமர் அலுவலகங்களைத் தவிர்த்து).எவ்வாறாயினும், ஒழுங்குமுறை இல. 20 அமைச்சுகள், ஜனாதிபதி மற்றும் பிரதமர் அலுவலகங்கள் உட்பட 'அனைத்து பொது நிறுவனங்களுக்கும்,' பொருந்தும்.


அரச நிறுவனங்கள் 30 வகையான தகவல்களுடன் தொடர்புடைய தகவல்களை நிகழ்நிலையில் (ஆன்லைனில்) முன்கூட்டியே வெளிப்படுத்துவதன் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டனர், அவை மேலும் 11 துணைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. தகவல் வகைகளில் பின்வருவன அடங்கும்:

1. நிறுவன தகவல்
2. அமைப்பு தகவல்
3. செயல்பாட்டுத் தகவல் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறைகள்
4. பொது சேவைகள்
5. பொதுக் கொள்கை, சட்டம் மற்றும் ஒழுங்குமுறை
6. பொதுமக்கள் பங்கேற்பு
7. பொது கொள்முதல் மற்றும் மானியங்கள்
8. வரவுசெலவுத் திட்டங்கள், செலவு மற்றும் நிதி
9. வகைப்படுத்துதல் மற்றும் தகவல்களை அணுகுவ-தற்கான அமைப்புகள்
10. முன்கூட்டிய தகவல் வெளிப்பாடு
11. தகவல் அறியும் உரிமைச் (சுவுஐ) சட்டத்தின் 9ம் பிரிவின் கீழ் பொது முதலீடுகளின் முன்கூட்டிய வெளிப்படுத்தல்கள்.


அரச நிறுவனங்கள் அவற்றின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்தும் மதிப்பெண், பயன்பாட்டு மதிப்பெண் மற்றும் ஒட்டுமொத்த கூட்டு மதிப்பெண் ஆகியவற்றின் அடிப்படையில் பின்வரும் குழுக்களுக்குள் வகைப்படுத்தப்பட்டனர்:

- 0-10%: திருப்தியற்ற
- 11-40%: ஓரளவு திருப்தியற்ற
- 41-60%: ஓரளவு திருப்திகரமான
- 61-80%: திருப்திகரமான
- 81-100%: மிகவும் திருப்திகரமான.

காட்சி 1: 2017 இல் ஒட்டுமொத்த கூட்டு மதிப்பெண்கள்




காட்சி 2: 2022 இல் ஒட்டுமொத்த கூட்டு மதிப்பெண்கள்




2017 ஆம் ஆண்டில், பெரும்பாலான அரச நிறுவனங்கள் 'ஓரளவு திருப்தியற்ற' குழுவிற்குள் வகைப்படுத்தப்பட்டுள்ளதோடு சில அரச நிறுவனங்கள் 'திருப்தியற்ற' குழுவிற்குள் வகைப்படுத்தப்பட்டனர் என்பதை காட்சி 1 வெளிப்படுத்துகிறது.


2022 ஆம் ஆண்டில், 'ஓரளவு திருப்திகரமான' குழுவிற்குள் அடங்கியிருக்கும் அரச நிறுவனங்களின் சதவீதம் அதிகரித்துள்ளதையும், 'திருப்தியற்ற' குழுவிற்குள் எந்த அரச நிறுவனமும் மதிப்பெண் பெறவில்லை என்பதையும் காட்சி 2 வெளிப்படுத்துகிறது.

பொது நிர்வாக அமைச்சு (57%) மற்றும் கமத்தொழில் அமைச்சு (53%) ஆகியவை அதிக ஒட்டுமொத்த கூட்டு மதிப்பெண்களைப் பெற்ற அரச நிறுவனங்களாகும்.

ஜனாதிபதி அலுவலகம் (18%), பிரதமர் அலுவலகம் (17%) மற்றும் தொழில்நுட்ப அமைச்சு (13%) ஆகியவை குறைந்த ஒட்டுமொத்த கூட்டு மதிப்பெண்களைப் பெற்றுள்ளன.

**உள்ளடக்க வெளிப்பாட்டின்** அடிப்படையில், பெரும்பாலான அரச நிறுவனங்கள் 'ஓரளவு திருப்தியற்ற' எனும் குழுவிற்குள் மதிப்பெண் பெற்றுள்ளதோடு எந்த அரச நிறுவனமும் 'திருப்தியற்ற' எனும் வகையில் மதிப்பெண்களைப் பெறவில்லை என்பதை காட்சி 3 விளக்குகிறது.

காட்சி 3- 2022 இல் உள்ளடக்க வெளிப்பாடு




வரவு செலவு திட்டங்கள், செலவு மற்றும் நிதி, அமைப்பு தகவல், நிறுவனத் தகவல் மற்றும் பொதுக் கொள்கை, சட்டம் மற்றும் ஒழுங்குமுறை வகைகளில் மிகவும் இற்றைப்படுத்தப்பட்ட மற்றும் முழுமையான தகவல்களை வெளியிட அரச நிறுவனங்கள் முனைந்தனர். இருப்பினும், இத் தகவல் பொதுவாக நிதி அமைச்சு (உ.தா. வரவு செலவுத் திட்டங்களுக்கு) அல்லது www.documents.gov.lk (உ.தா. சட்டத்திற்கு) போன்ற இரண்டாம் நிலை இணையதளத்தில் அணுகக்கூடியதாக இருந்தது.

கமத்தொழில் அமைச்சு (57%), பொது நிர்வாக அமைச்சு (51%), மற்றும் சுற்றாடல் அமைச்சு (42%) ஆகியன அதிக மதிப்பெண்களைக் கொண்ட உள்ளடக்கத்தை வெளிப்படுத்தும் அரச நிறுவனங்கள் ஆகும்.

குறைந்த உள்ளடக்கத்தை வெளிப்படுத்தும் மதிப்பெண்களைக் கொண்ட அரச நிறுவனங்கள்: ஜனாதிபதி அலுவலகம் (17%), தொழில்நுட்ப அமைச்சு (15%) மற்றும் பிரதமர் அலுவலகம் (13%).

தகவல் வெளிப்படுத்தல் மூன்று கருப்பொருள் பகுதிகளின் கீழ் பகுப்பாய்வு செய்யப்பட்டது:

1. பொது பொறுப்புக்கூறல்
2. பொது அணுகல்
3. தகவல் அறியும் உரிமை தொடர்பான வெளிப்பாடுகள்


பொதுக் கொள்கைகள் பொதுவாக முன்கூட்டியே வெளிப்படுத்தப்பட்டாலும், அரசாங்கத்தின் முடிவெடுக்கும் செயல்முறைகள் பெரும்பாலும் வெளிப்படுத்தப்படவில்லை என பொதுப் பொறுப்புக்கூறல் பற்றிய கருப்பொருள் பகுப்பாய்வின் கண்டுபிடிப்புகள் குறிப்பிடுகின்றன. எனவே, தகவல்களின் வெளிப்படையற்ற தன்மை காரணமாக கொள்கைகள் உருவாக்கப்படும் செயல்முறையை ஆராய்வதற்கான பொதுமக்களின் திறன் கட்டுப்படுத்தப்படுகிறது. 42% ஆன அரச நிறுவனங்கள் விலைமனு கோரல்கள் துணைப்பிரிவின் வெளியீட்டிற்கு முழு புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இருப்பினும், 6% அரச நிறுவனங்கள் மாத்திரமே வெற்றிகரமான விலைமனு கோரல்களை மற்றும் தீர்த்தளிக்கப்பட்ட விலை மனுக்கள் துணைப்பிரிவுகளின் வெளியீட்டிற்கான முழுப் புள்ளிகளையும் பெற்றுள்ளனர். அதாவது விலை மனு அறிவிப்புகள் பகிரங்கப்படுத்தப்பட்டாலும், வழங்கப்பட்ட விலை மனுக்கள் பற்றிய தகவல்கள் போதுமான அளவில் வெளியிடப்படவில்லை என்பதே இது குறிக்கிறது.

பொது மக்களின் அணுகலைப் பொறுத்தவரை, பொது மக்களின் பங்கேற்பு எனும் வகை அனைத்து அரச நிறுவனங்களிலும் மிகக் குறைந்த மதிப்பெண்களைப் பெற்றுள்ளது. மேலும், பல அரச நிறுவனங்கள் பொது சேவைகள் பிரிவின் கீழ் தகவல்களை வழங்கியிருக்கவில்லை. இப் பகுதியில் போதிய உள்ளடக்கத்தை வெளிப்படுத்தாமல் இருப்பதனூடாக அரசாங்கத்தின் முடிவெடுக்கும் செயல்முறைகளில் பொதுமக்களின் பங்களிப்பு தடுக்கப்படலாம்.

தகவல் அறியும் உரிமை தொடர்பான வெளிப்படுத்தல்களின் கருப்பொருள் பகுப்பாய்வு, அரச நிறுவனங்கள் தகவல் அறியும் உரிமைச் (RTI) சட்டம் மற்றும் அதன் விதிமுறைகளை திறம்பட செயல்படுத்தவில்லை என்பதை வெளிப்படுத்துகிறது. குறிப்பிடத்தக்க வகையில், பத்து அரச நிறுவனங்கள் தங்கள் தகவல் அதிகாரி மற்றும்அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரியை தொடர்பு கொள்வதற்கான தகவலை வெளியிடத் தவறியுள்ளனர். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஏற்கனவே கட்டாயப்படுத்தப்பட்டுள்ள தகவல்களை முன்கூட்டியே வெளிப்படுத்துவது, தகவல் அறியும் உரிமையைப் பயன்படுத்துவதற்கான அணுகல் மற்றும் செயல்திறனை கணிசமாக மேம்படுத்துகிறது. இருப்பினும், இது சம்பந்தமாக, பெரும்பாலான அரச நிறுவனங்கள் 0 புள்ளிகளைத் தான் பெற்றுள்ளனர்.மேலும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 9ம் பிரிவின் கீழ் பொது முதலீடுகள் பற்றிய தகவல்களை வெளியிடுவதில் பெரும்பாலான அரச நிறுவனங்களின் செயற்பாடு மோசமாவே உள்ளது.

**பயன்பாட்டினைப்** பொறுத்தவரை, பெரும்பாலான அரச நிறுவனங்கள் 'ஓரளவு திருப்தியற்ற' எனும் குழுவிற்குள் தான் மதிப்பெண் பெற்றுள்ளனர் என்பதை காட்சி 4 விளக்குகிறது.

காட்சி 4 - 2022 இல் பயன்பாடு




தகவல்கள் பெரும்பாலாக வெளியிடப்பட்ட மொழி ஆங்கில மொழியாகவும், சிங்களம் மற்றும் தமிழ் ஆகியவை அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன. இருப்பினும், சராசரி மொழி அணுகல் மதிப்பெண் 38% ஆக இருப்பதால், தகவல்களுக்கு மும்மொழி அணுகலை வழங்குவதில் குறிப்பிடத்தக்க இடைவெளிகள் காணக்கூடியதாக இருக்கின்றது.

அறிக்கையின் முக்கிய கண்டுபிடிப்புகளில் ஒன்று, தகவலை வெளிப்படுத்துவதில் ஒரு மொழி சார்பு நிலை காணப்படக்கூடியதாக உள்ளது. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கான அரச நிறுவனங்களில் தகவல் வெளிப்படுத்தல் மதிப்பெண்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, ஆங்கிலத்தில் தகவல் வெளியிடும் அரச நிறுவனங்களின் மதிப்பெண்ணை ஒரு அளவுகோலாகப் பயன்படுத்தி மொழி சார்பு மதிப்பிடப்பட்டது. மொழி சார்பு மதிப்பெண்களின் அடிப்படையில், வனவிலங்கு அமைச்சு மற்றும் ஜனாதிபதி அலுவலகம் ஆகியவை மொழியின் அடிப்படையில் பயன்படுத்துவதற்கு மிகவும் இலகுவான அரச நிறுவனங்களாக இருப்பதை அவதானிக்கலாம். இலங்கை முதலீட்டுச் சபையானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் எதிராக உயர் பாரபட்சத்தைக் கொண்டிருந்ததோடு மற்றும் மிகவும் குறைவான மொழிச் சார்பு நிலையை காட்டும் அரச நிறுவனமாகும். இம் மொழிச் சார்பு நிலை, குறிப்பாக ஆங்கிலம் பேசத் தெரியாத நபர்களுக்கு, தகவல்களை அணுகுவதில் சிரமத்தை ஏற்படுத்துகிறது.

உள்ளடகங்களை வெளிப்படுத்தல் மதிப்பீடு (75%) மற்றும் பயன்பாட்டு மதிப்பீடு (25%) ஆகியவற்றின் நிறையிடப்பட்ட கலவையால் தீர்மானிக்கப்படும் அரசாங்கத்தின் வெளிப்படை தன்மையின் மதிப்பெண், 2022 இல் 100க்கு 33 எனும் மிகக் குறைவான நிலையில் காணக்கூடியதாக இருந்தது. இதற்கான முக்கிய காரணம் என்னவென்றால் குறைவான மதிப்பெண்கள்களை பெற்ற கணிசமான எண்ணிக்கையிலான அமைச்சுகள் இருப்பதாகும். இலங்கை அரசாங்கம் தனது அமைச்சுக்களில் உள்ளடக்கத்தை வெளிப்படுத்துதல் மற்றும் உள்ளடக்கத்தைப் பயன்படுத்துதல் ஆகிய இரண்டையும் மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று இவ்வறிக்கை பரிந்துரைக்கிறது.

பொது அதிகாரசபைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் கலாச்சாரத்தை வளர்ப்பதற்கு தகவல் அறியும் உறிமைச் சட்டம் (RTI) திறம்பட அமுல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக, குறிப்பாக சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில், தகவல்களை வெளிப்படுத்துவதை மேம்படுத்துவதற்கான தேவையை வலியுறுத்திக் கொண்டு இவறிக்கை முடிவுபெறுகிறது.

Verité Research
Strategic Analysis for Asia

A | No. 5A, Police Park Place, Colombo 5
T | +94 11-2055544
E | reception@veriteresearch.org
W| www.veriteresearch.org